செ.வெ.எண்.28 நாள்:14.10.2020

## கரூர் மாவட்டம்

சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் மூலம் இரண்டாம் நிலை காவலர்களுக்கான மொத்தம் 7800 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர் | 695 |
| 2) | இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்பு காவல்படை | 6545 |
| 3) | சிறைத்துறை இரண்டாம் நிலை காவலர் | 112 |
| 4) | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 458 |

இவற்றில் 5% இடங்கள் (7800x 5% = 390) முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச கல்வித்தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி ஆகும். 01.07.2020 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். 17.09.2017-க்கு பின்னர் படைப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள் மேற்காணும் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 26-10-2020 ஆகும். இணையவழி மூலமாக விண்ணப்பம் (ஆன்லைன்) சமர்ப்பிக்க வேண்டிய இணையதள முகவரி www.tnusrbonline.org

எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள தகுதிபடைத்த முன்னாள் படைவீரர்கள் இப்பணியிடங்களுக்கு பெருமளவு விண்ணப்பித்து பயனடையுமாறும், விண்ணப்பித்த முன்னாள் படைவீரர்கள் அதன் விவரத்தினை 27-10-2020-க்குள் திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்திடவும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த. அன்பழகன்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**

https://www.freshersnow.com/tamilnadu-govt-jobs/